PERCETAKAN KM., 325, JALAN PAHANG, SETAPAK, K.L.

முப்பத்தாறு தத்துவங்கள்

புலவர்மணி - சித்தாந்த வித்தகர்

முரு. பழ. இரத்தினம் செட்டியார்

இரண்டாம் அனைத்துலகச்
சைவசித்தாந்தக் கருத்தரங்கு
கோலாலம்பூர், மலேசியா.

முப்பத்தாறு
தத்துவங்கள்

புலவர்மணி - சித்தாந்த வித்தகர்

முரு. பழ. இரத்தினம் செட்டியார்

இரண்டாம் அனைத்துலகச்
சைவசித்தாந்தக் கருத்தரங்கு
கோலாலம்பூர், மலேசியா.

முதற்பதிப்பு: *1986*

This book is published in conjunction with the Second International Saiva Siddhanta Seminar with a generous grant from the All Malaya Nattukkottai Chettiar's Fund, University of Malaya, Kuala Lumpur.

ஏற்பாட்டாளர்கள்:

இந்திய ஆய்வியல் துறை மலாயா பல்கலைக் கழகம	மலேசிய இந்து சங்கம்
மலாயா அருள்நெறித் திருக்கூட்டம்	ஸ்ரீ மகா மாரியம்மன் தேவஸ் தானம், கோலாலம்பூர்.
சிலாங்கூர் கூட்டரசுப் பிரதேச இலங்கை சைவர்கள் சங்கம்	ஸ்ரீ தண்டாயுதபாணி ஆலயம், கோலாலம்பூர்

விலை:

பிரதிகள் கிடைக்குமிடம்:

Copies can be obtained from:

Secretary,
Kalamandapam,
3, Lorong Scott,
50470 Kuala Lumpur,
Malaysia.

பதிப்புரை

"சைவ சமயமே சமயம்; சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்னுள்வெளிக் காட்டும் இந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந்து உழலும் சமயநெறி புகுத வேண்டாம்; முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாரும் சகத்திரே"
— தாயுமானவர்

உலகிலுள்ள உயிர்க்கூட்டம் உய்வதற்காகப் பிறந்ததே சமயம். சமயங்கள் பலவாயினும், அவற்றுள் காலத்தால் பழமையான சமயங்களுள் ஒப்பற்றது சைவம். சிவநெறியாகிய செந்நெறியே சைவநெறி. இந்நெறியின் தத்துவச் சாரமே சைவ சித்தாந்தம். சைவ சித்தாந்தம் தமிழர்களின் பெருஞ்சொத்து. தமிழ் இனம் உலகிற்கு அளித்த பெருங்கொடை. இதனை அறியாமல் சில நூற்றுண்டுகளையே நாம் வீணாகக் கழித்துவிட்டோம். இதனையறிந்து, சிவநெறியை உலகில் உள்ள அனைவரும் எளிதாகப் புரிந்துகொள்ளும் பெருநோக்கில், தமிழையும் சைவத்தையும் தம்மிரு கண்களாகக் கொண்ட தருமை ஆதீனக் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், 1984-ஆம் ஆண்டு மே மாதம் திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைந்து முதலாம் அனைத்துலகச் சைவ சித்தாந்தக் கருத்தரங்கு ஒன்றினைத் தருமையில் கூட்டி அருளினார்கள். அதன் பயனாகவே அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி மையம் உருவானது. இதற்கு இருபது இலட்சம் ரூபாய் தந்து குருமகா சந்நிதானம் அவர்களே தொடங்கி வைத்தார்கள். சைவ வரலாற்றில் இது ஒரு பெரும் திருப்புமுனை எனலாம்.

இரண்டு ஆண்டுகள் கழித்து, இப்போது மலேசியாவில் இரண்டாம் அனைத்துலகச் சைவ சித்தாந்தக் கருத்தரங்கினைக் கூட்ட முன்வந்தது, சைவ உலகம் பெருமை கொள்ளத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். மலாயா அருள்நெறித் திருக்கூட்டம், சிலாங்கூர் - கூட்டரசுப் பிரதேச இலங்கைச் சைவர் சங்கம், மலாயாப் பல்கலைக் கழக இந்திய ஆய்வியல் துறை, மலேசிய இந்து சங்கம், தலைநகர் ஸ்ரீ மகா மாரியம்மன் தேவஸ்தானம், தலைநகர் ஸ்ரீ தெண்டாயுதபாணி கோவில் ஆகிய ஆறு அமைப்புக்கள் இணைந்து இதனை நடத்த முன்வந்திருப்பது மிகுந்த பாராட்டிற்குரிய ஒரு செயல்.

இக்கருத்தரங்கின் நினைவாகச் சில நூல்களையேனும் வெளியிட வேண்டும் என்பது ஏற்பாட்டுக் குழுவினரின் நோக்கங்களில் ஒன்று. அதனையொட்டித் தமிழில் மூன்று நூல்களும், ஆங்கிலத்தில் இரண்டு நூல்களுமாக வெளிவருகின்றன. இப்பெரு முயற்சிக்கு துணைநின்று அதனை வெளியிடுவதற்கான தொகை முழுவதையும் தா மலாயாப் பல்கலைக் கழகத்தில் நிறுவப்பட்டுள்ள நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறநிறுவனம் முன்வந்துள்ளது சைவ உலகம் நன்றியோடு நினைக்க வேண்டிய ஒன்றாகும். அவர்களுக்கு ஏற்பாட்டுக் குழுவினரின் சார்பில் நன்றி.

தருமபுரத்தில் நிறுவப்பட்டுள்ள அனைத்துலகச் சைவ சித்தாந்த ஆராய்ச்சி மையமும் இக்கருத்தரங்கின் நினைவாகச் சுமார் பத்து நூல்களை வெளியிட்டுள்ளன.

சைவ உலகம் இச்சிறந்த நூல்களை உரிய வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே எங்கள் அவா.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இரா. தண்டாயுதம்
(நூல் வெளியீட்டுத் துணைக்குழுத் தலைவர்)

கோலாலம்பூர்,
5-11-86

மாயை

உலகத் தோற்றத்திற்கு மூலகாரணமாய் இருப்பது மாயை என்னும் பொருளாகும்.

உலகில் காணப்படும் மண், நீர், தீ, முதலிய பொருட்களைப் பகுத்துக் கொண்டே சென்றால் அவை பல நுணுகிய நிலைகளை அடைந்து முடிவில் ஒரு பேராற்றலாக மாறும் என விஞ்ஞானம் கூறுகிறது.

இக்கருத்தை ஒட்டியேதான் சைவசித்தாந்தம் எல்லாச் சடப் பொருட்களின் ஆற்றல்களும் திரண்ட மயம்-மாயை என்றும் அதனின்றும் உலகச் சடப்பொருட்கள் தோன்றி நின்று பின்னர் அதனுள்ளே ஒடுங்கும் என்றும் கூறுகிறது.

உலகில் காணப்படும் சடப்பொருட்களையே மூலம் எனக் கூற முடியாது. ஏனெனில் அவை அனைத்தும் காலகதியில் அழிகின்றன. அழிகின்ற பொருட்களுக்கு மூலமாய்-அழியாமல் நித்தியமாய் ஒரு பொருள் இருக்க வேண்டும். அஃதே மாயை என்னும் பொருளாகும்.

சடப்பொருட்கள் அனைத்தும் அறிவற்றன. அறிவற்ற பொருட்களுக்கு அறிவற்ற மாயை மூலப்பொருளாக அமைகிறது. அதுதான் பொருத்தம். அறிவுள்ள பொருளில் இருந்து அறிவற்ற பொருள் உண்டாகாது. கடவுள் பேரறிவுப் பொருள். அவரிடமிருந்து அறிவற்ற மாயை உண்டாகி இருக்க முடியாது. அவர், "உண்டாகுக" எனச் சங்கற்பித்ததும் உண்டாயிற்று என்று சொன்னாலும் அஃது அவரிடமிருந்து உண்டாயிற்று என்றுதான் பொருள். இன்மையிலிருந்து எதுவும் உண்டாகாது.

கடவுளிடமிருந்து மாயை உண்டாகி இருந்தால் அஃதும் அவரைப் போல அறிவுள்ளதாக இருக்கும். மாயை அறிவற்றதாக இருப்பதால் அஃது அவரிடமிருந்து உண்டாகவில்லை என்றும் அஃதும் அவரைப் போலவே அநாதி நித்தியமாய் உள்ள பொருள் என்றும் சைவ சித்தாந்தம் கூறுகிறது.

மாயை அறிவற்றதாக இருப்பதால் அது தானாகவே உலகத்தைத் தோற்றுவித்திருக்க முடியாது. பேர்றிவுப் பொருளாகிய கடவுள்தான் உயிர்களுக்கு அறிவு விளங்கும் பொருட்டு மாயையிலிருந்து இவ்வுலகத்தையும் உடல்களையும் தோற்றுவித்திருக்க வேண்டும்.

மாயை பொருளால் ஒன்றேதான் உயிர்களுள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகை உண்டு. விஞ்ஞானகலர் மென்மையான ஆணவமலப் பிடிப்பு உடையவர். பிரளயாகலர் சிறிது கூடுதலான ஆணவமலப் பிடிப்பு உடையவர். சகலர் மிகவும் அதிகமான ஆணவமலப் பிடிப்பு உடையவர். இம்மூவகையினரும் செயலாற்ற மூவகையான உலகம் வேண்டும்.

கடவுள் தன் திருவருட்சக்தியை மாயையின் ஒரு பகுதியில் மிகவும் முனைக்கும்படி செய்விக்கிறார். அப்பகுதி சுத்த மாயை எனப் பெயர் பெறுகிறது. அடுத்தபடியாக மற்றொரு பகுதியில் தன் திருவருட் சக்தியைக் குறைவாக முனைக்கும்படி செய்விக்கிறார். அப்பகுதி அசுத்த மாயை எனப் பெயர் பெறுகிறது. இன்னொரு பகுதியில் தன் திருவருட் சக்தியை இறைவன் மிக மிகக் குறைவாக முனைக்கச் செய்கிறார். அப்பகுதி பிரகிருதி மாயை எனப் பெயர்

பெறுகிறது. மேலே குறிப்பிட்ட மூவகை ஆன்மாக்களுக்கும் மாயை இவ்வாறு மூவகையாகப் பிரிந்து இடம் கொடுக்கிறது. நாம் சகல வர்க்கத்தைச் சேர்ந்த ஆன்மாக்களாகும். நாம் வசிக்கின்ற இந்த உலகம் பிரகிருதி மாயையைச் சேர்ந்ததாகும்.

மாயை முப்பத்தாறு தத்துவங்களாக நின்று மூவகை உயிர்களுக்கும் உலகாகவும், உடலாகவும் பயன்படுகிறது.

மூவகை மாயையிலிருந்தும் தத்துவங்கள் தோன்றுகின்றன. தத்துவம் என்பதற்கு இவ்விடத்தில் ''கருவி'' என்பது பொருளாகும்.

சைவசமயம் ஒன்றே முப்பத்தாறு தத்துவங்களைக் கூறுகின்றது. ஏனைச் சமயங்களில் பெரும்பாலானவை இருபத்திநாலு தத்துவங்களையே சொல்கின்றன. சில சமயங்கள் ஒன்றிரண்டு தத்துவங்களைக் கூடுதலாகச் சொன்னாலும் முப்பத்தாறு என்ற அளவுக்குச் சொல்லவில்லை.

சங்கர வேதாந்திகள் தாத்துவிகங்கள் சிலவற்றைத் தத்துவங்களில் வைத்து 64. என்று எண்ணிக்கை சொல்வதுண்டு. சைவசித்தாந்தம் தத்துவமாகாது. 36. சொல்கிறது; தாத்துவிகங்களைத் தனியாகச் சொல்வதால், தத்துவமாக 36 சொல்கின்ற ஒரே சமயம் சைவம் தான் என அறிதல் வேண்டும்.

முப்பத்தாறு தத்துவங்கள்

சுத்தமாயா தத்துவங்கள் ஐந்து; அவையாவன:-

(1) சிவம் (2) சக்தி (3) சாதாக்கியம் (4) ஈசுவரம்
(5) சுத்தவித்தை.

அசுத்தமாயா தத்துவங்கள் ஏழு. அவையாவன:-

(1) காலம் (2) நியதி (3) கலை (4) வித்தை
(5) அராகம் (6) புருடன் (7) மாயை.

பிரகிருதிமாயா தத்துவங்கள் இருபத்துநான்கு அவையாவன: —

(1) மண் (2) நீர் (3) தீ (4) காற்று (5) வான்
இவ்வைந்தும் பூதங்கன் எனப்படும். (6) நாற்றம்
(7) சுவை (8) ஒளி (9) ஊறு (10) ஒலி.
இவை ஐந்தும் தன்மாத்திரைகள் எனப்படும்.
வடநூலார் மண், நீர், தீ, காற்று, வான் ஆகிய ஐந்து
பூதங்களையும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனக்
கூறுவர். தன் மாத்திரைகளாகிய நாற்றம், சுவை, ஒளி, ஊறு
ஒலி ஆகிய கந்த தன் மாத்திரை. இரதன் மாத்திரை உருவதன்
மாத்திரை பரிச தன்மாத்திரை, சத்த தன்மாதிரை எனக்கூறு
வர். (11) செவி (12) தோல் (13) கண் (14) நாக்கு
(15) மூக்கு ஆகிய ஐந்தும் ஞானேந்திரியங்கள் எனப்படும்.
(16) வாய் (17) கால் (18) கை (19) எருவாய் (20) கருவாய்
என ஐந்தும் கன்மந்திரியங்கள் எனப்படும். வடநூலார்
இவற்றை வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம்
எனக்கூறுவர். (21) மனம் (22) புத்தி (23) சித்தம்
(24) அகங்காரம் என அந்தக்கரணங்கள் நான்கு ஆகும்.
ஆகப் பிரகிருதி மாயா தத்துவங்கள் இருபத்து நான்காகும்.

சுத்தமாயா தத்துவங்கள் ஐந்தும் சிவதத்துவம் எனப்படும். அசுத்தமாயா தத்துவம் ஏழும் வித்தியாதத்துவம் எனபபடும். பிரகிருதிமாயா தத்துவம் 24-ம் ஆன்மதத்துவமம் எனப்படும். மொத்தம் மூன்று மாயையிலும் உள்ள தத்துவங்கள் முப்பத்தாறாகும்.

பிரகிருதிமாயா தத்துவங்கள்

நாம் வசிக்கின்ற உலகம் பிரகிருதிமாயா உலகமாகும். இம்மாயை இருபத்துநான்கு தத்துவங்களால் ஆனது என மேலே கண்டோம். பிரகிருதிமாயையில் நம் கண்ணுக்குத் தெரிவன, ஐம்பெரும் பூத தத்துவங்களாகும். தொல்காப்பியர், '' நிலம், தீ, நீர், வளி விசும் போடைந்தைந்தும் கலந்த மயக்கம் உலகமாதலின்'' எனக் கூறுகிறார்.

பூதங்கள் ஐந்து

மண், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களும் நமக்குப் புலனாகின்றன. மண், நீர் முதலியவை நமக்குத் தெரிந்த அளவினும் பார்க்க விரிந்து பரந்து கிடக்கின்றன. சந்திர மண்டலத்திலும் மண் இருப்பதாக அறிகின்றோம். மண் தத்துவம் பூமியாக நம்மைத் தாங்கிக்கொண்டு இருக்கிறது. கல், மலை முதலியவையும் இரும்பு, வெள்ளி, ஈயம், தங்கம் முதலியவையும் மண் தத்துவத்தைச் சார்ந்தவை ஆகும்.

கடல் நீர், ஊற்று நீர், மழை நீர், ஆற்று நீர் முதலியவையும் பல்வேறுவகைத் திரவங்களும் நீர் தத்துவத்தைச் சார்ந்தவை ஆகும். மின் ஆற்றல், பல்வேறு வகை ஒளிகள் ஆகியவை தீ தத்துவத்தைச் சார்ந்தவை ஆகும். பிராணவாயு, கரிமலவாயு முதலிய எல்லா வாயுக்களும் காற்றுத் தத்துவத்தைச் சேர்ந்தவை ஆகும். பொருட்களின் கண் உள்ள இடைவெளிகளும் மேலே காணப்படும் பெருவெளியும் ஆகாய தத்துவத்தைச் சார்ந்தவை ஆகும்.

ஐம்பூதங்களைப் பெரும்பாலான சமயங்கள் ஒப்புக்கொள்கின்றன. ஆகாய தத்துவத்தை ஒரு பூதமாக ஒப்புக்கொள்ளாத சில சமயங்கள் உண்டு. வெளி என்பது பொருளின்மை ஆதலால் அஃது ஆகாயம் என்னும் பொருள் ஆகாது என்பது அவற்றின் கொள்கை. இன்மையில் இருந்து எதுவும் உண்டாகாது. உள்ளதில் இருந்துதான் எதுவும் தோன்றும். ஒலி வெளி இல்லையேல் தோன்றாது. ஒலி உண்டாவதற்கு வெளியின் இருப்பு அவசியமாக இருப்பதால் அஃது ஒரு பொருளாகவே கொள்ளப்படும்.

தன்மாத்திரைகள் ஐந்து

மண், நீர், நெருப்பு முதலிய பூதங்கள் தூலமாக நமக்குப் புலனாகின்றன. எந்த ஒரு தூலப் பொருளுக்கும் சூக்கும நிலை இருந்தே

ஆக வேண்டும். சூக்குமத்தில் இருந்துதான் தூலம் வெளிப்படும். விஞ்ஞானமும் தூலப் பொருட்களைப் பகுத்துக் கொண்டே சென்றால் அவை பல நுணுகிய நிலைகளை அடைந்து முடிவில் பேராற்றலாக மாறும் எனச் சொல்கிறது. ஐம்பூதங்களுக்கும் உள்ள சூக்கும நிலைகளே தன்மாத்திரைகள் எனப்படும். மண் தத்துவத்திற்குச் சூக்குமநிலை நாற்ற தன்மாத்திரை ஆகும். நீர், தத்துவத்திற்குச் சூக்குமநிலை சுவைத் தன்மாத்திரை ஆகும். தீ என்னும் பூதத்திற்குச் சூக்குமநிலை ''ஒளி'' தன்மாத்திரை ஆகும். காற்று என்னும் பூதத்திற்குச் சூக்குமநிலை ஸ்பரிச (ஊறு) ஆகும். காற்று என்னும் பூதத்திற்குச் சூக்குமநிலை ஒலி தன்மாத்திரை ஆகும். ஆகாயம் என்னும் பூதத்திற்குச் சூக்குமநிலை ஒலி தன்மாத்திரை ஆகும். எனவே, மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களுக்கும் முறையே நாற்றம், சுவை, ஒளி, ஊறு, ஒலி என்பன தன்மாத்திரைகளாக விளங்குகின்றன.

''தன்மாத்திரை'' என்றால் தன் அளவில் குணங்கள் வெளிப் படாமல் நிற்பது என்பது பொருள். சைவசித்தாந்தத்தில் குணங்களின் தொகுதி பொருள் எனக் கூறப்படும். தன்மாத்திரைகள் அனைத்தும் குணங்களின் தொகுதி ஆதலால் அவை பொருட்களாகின்றன.

உயிர் ஒரு பொருள் என்கிறோம் உயிருக்கு அறிவு, இச்சை, செயல்கள் என மூன்று குணங்கள் உண்டு. இம்மூன்று குணங்களின் தொகுதிதான் உயிர் என்னும் பொருளாக விளங்குகின்றது. இவ்வாறு தான் எந்த ஒரு பொருளையும் நாம் ஆராய்ந்து பார்த்தால் அது குணங்களின் தொகுதியாகவே இருக்கும். இதுபோலவே தன்மாத்திரை களும் குணங்களின் தொகுதியாக இருப்பதைக் காணலாம்.

இடம் கொடுத்தலாகிய தொழிற் குணத்தையும் வல்லோசை, மெல்லோசை முதலிய ஓசைகளாகிய பண்புகளையும் உள்ளடக்கிப் பொதுமையில் ஓசை மாத்திரையாய்ச் சூக்குமமாய் நிற்பது ஒலி தன்மாத்திரை ஆகும்.

ஓசையோடு கூடத்தட்பம், வெப்பம் முதலிய குணங்களை உள்ளடக்கி நிற்பது ஊறு தன்மாத்திரை ஆகும். ஓசை, தட்பம், வெப்பம் முதலியவற்றோடு வெண்மை, செம்மை முதலிய குணங்களை உள்ளடக்கி நிற்பது ஒளி தன்மாத்திரை ஆகும்.

ஓசை, தட்பவெப்பம், வெண்மை, செம்மை முதலியவற்றோடு கூடத்தித்திப்பு, புளிப்பு முதலிய சுவைகளை உள்ளடக்கி நிற்பது சுவைத் தன்மாத்திரை ஆகும்.

ஓசை, தட்பவெப்பம், வெண்மை, செம்மை, தித்திப்பு, புளிப்பு முதலிவற்றோடுகூட நறுநாற்றம், தீநாற்றம் முதலிய நாற்றங்களை உள்ளடக்கி நிற்பது நாற்ற தன்மாத்திரை ஆகும்.

ஒவ்வொரு தன்மாத்திரைக்கும் கூடுதலாகச் சிறப்பு வகையாய் இருக்கும் குணத்தைக் கொண்டு பெயரிடப்படும். இத்தன்மாத்திரைகள் ஆகாயம் முதலிய பெரும்பூதம் ஐந்திற்கும் முதற்காரணமாக அமையும். ஐம்பூதங்களில் குணங்கள் வெளிப்பட்டு நிற்கும்; தன்மாத்திரைகளில் வெளிப்பட்டு நிற்கும்.

ஞானேந்திரியங்கள் ஐந்து

காது, தோல், கண், நாக்கு, மூக்கு என்னும் ஐந்தும் ஞானேந்திரிய தத்துவங்களாகும். இவை நம் உடலின் கண் உள்ள கருவிகளாகும்.

இவற்றை அறி கருவிகள் என்று தமிழ் நூலார் கூறுவர். இந்த ஐந்து கருவிகளும் முறையே ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐந்தையும் உயிர் அறிவதற்குக் கருவியாகப் பயன்படும்.

காது ஒலியைக் கேட்கிறது; தோல் ஊற்றுணர்வை அறிகிறது; கண் பொருட்களைக் காண்கிறது; நாக்கு சுவையை அறிகிறது; மூக்கு மணத்தை நுகர்கிறது. காது, தோல், கண் முதலியவற்றைப் பொறி கள்'' என்றும் அவை அறிகின்றவற்றைப் ''புலன்கள்'' என்றும்

இப்பொறிகள் தாமே புலன்களை அறியமாட்டா. இப்பொறிகளின் வேறாய் இவற்றை அதிட்டித்து நிற்கும் உள் இந்திரியங்கள் ஐந்து உண்டு. அவற்றையே ஞானேந்திரிய தத்துவங்கள் எனச் சொல்வதுண்டு. ஆனால் அவ்விந்திரியங்கள் செயல்பட இப்பொறிகளும் நன்னிலையில் இருக்க வேண்டுமாதலால், இரண்டையும் சேர்த்தே ஞானேந்திரியங்கள் எனக் கொள்ள வேண்டும். மனம் சேர்ந்தால் இப்பொறிகள் சிறப்பு வகை யாகப் பொருட்களை அறியும். மனம் சேராவிட்டால் பொது வகையாக அறியும்.

கன்மேந்திரியங்கள் ஐந்து

வாய், கால், கை, எருவாய், கருவாய் ஆகிய ஐந்தும் கன்மேந்திரியங் கள் எனப்படும். இவற்றைத் தொழிற் கருவிகள் எனத் தமிழ் நூலார் கூறுவர். இக்கருவிகள் உயிர் தொழிற்படுவதற்குப் பயன்படும். வாய் பேசும், கால் நடக்கும், கை கொடுக்கும், வாங்கும் கை இந்திரியம் உடலில் உள்ள மற்ற பாகங்களிலும் விரவி நிற்கும். கண் இமைத்தல், புருவம் நெறித்தல் முதலியன கை இந்திரியத்தின் தொழிற்பாடாகவே கொள்ளப்படும். எருவாய் கழிப்பன கழிக்கும். கருவாய் இனப்பெருக்கம் செய்யும்.

நாக்கு சுவை அறிவதால் ஞானேந்திரியமாயிற்று. அஃதே பேசுதலாகிய தொழிலைச் செய்வதால் கன்மேந்திரியமும் ஆயிற்று. நாக்கு வாயாகிய இடைவெளி இல்லாது 'பேச முடியாதலால் நாக்கைக் கன்மேந்திரியமாகக் குறிப்பிடும்போது வாய் என்று சொல்கிறோம்.

ஞானேந்திரியங்களாகிய செவி, கண், நாக்கு, மூக்கு ஆகியவற்றைச் சோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் என்று வடநூலார் சொல்வர். இவற்றின் புலன்களைச் சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்றும் இதேபோலக் கன்மேந்திரியங்களை வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்றும் அவற்றின் தொழிற்பாடுகளை வசனம், கமனம், தானம். விசர்க்கம். அனந்தம் என்றும் வடமொழியில் சொல்லப்படும்.

வாய், கால், கை, முதலிய உறுப்புகளுக்குள் இருந்து தொழில் படுத்தும் ஆற்றல்களையே கன்மேந்திரியங்கள் என்று சொல்வது வழக்கம். எனினும் அவ்வாற்றல்கள் செயற்படுவதற்கு இவ்வுறுப்புக் களும் வேண்டப்படுமாதலால் இரண்டையும் சேர்த்தே கன்மேந்திரியங் கள் என்று சொல்ல வேண்டும்.

அந்தக்கரணம் நான்கு

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கும் அந்தக்கரண

தத்துவங்களாகும். அந்தக்கரணங்கள் என்றால் உட்கருவிகள் என்று பொருள்.

கண். காது, மூக்கு முதலிய ஞானேந்திரியங்களையும், கை, கால் முதலிய கன்மேந்திரியங்களையும் அவை உடலின் புறத்தே இருப்பதால் நாம் நன்கு அறிகிறோம். அந்தக்கரணங்கள் உள்ளே இருக்கின்ற கருவிகள். ஆதலால் அவற்றை நாம் பார்க்க முடியாது. ஆனால் அனுபவத்தால் உணரலாம்.

கடையில் ஒரு பொருள் இருப்பதைக் கண் பார்க்கிறது. அது மிட்டாய் ஆக இருக்குமா? வேறு பொருளாக இருக்குமா? என்று நம் மனம் சங்கற்பவிகற்பம் செய்கிறது. மிட்டாயாக இருந்தால் வாங்கித் தின்னலாமே? என்னும் ஆசையும் நம்மனத்தின் கண் உண்டாகிறது. இவ்வாறு சந்தேகப்படுதலும் ஆசைப்படுதலும் மனம் என்னும் அந்தக் கரணத்தின் செயலாகும்.

பார்த்த பொருளை, ''இன்னது என அறிந்து வாங்க முயல்வேன்'' என்னும் ஓர் எழுச்சி நம்மிடையே தோன்றுகிறது. இந்த எழுச்சியை அகங்கார தத்துவம் என்று கூறுகிறோம். அகங்கார தத்துவம் ஒருப்பட்டு எழுந்தால்தான் நாம் எந்தச் செயலையும் செய்ய முடியும். நாம் ஒரு செயலைச் செய்ய எண்ணி அப்புறம் செய்யாமல் விட்டுவிட்டோமானால் நம்முடைய அகங்கார தத்துவம் வலிமையாக இல்லை என்று பொருள். எந்த ஒரு முயற்சிக்கும் அகங்கார தத்துவத்தின் எழுச்சி வேண்டும். முனைப்போடு செயலாற்றத் துணிவது அகங்கார தத்துவத்தின் தொழிற்பாடாகும்.

புத்திதத்துவம் நாம் கண்டபொருளை மிட்டாய் தான் என நிச்சயிக்கிறது. இவ்வாறு நிச்சயம் செய்வதும் அந்தப் பொருள் நமக்கு ஆகுமா? ஆகாதா? என்பதை நிர்ணயிப்பதும் புத்திதத்துவத்தின் செயற்பாடாகும்.

நாம் மிட்டாயை எடுத்து உண்ணும்போது, புத்திதத்துவம் மிட்டாய் உணர்வாகத் திரிந்து நிற்கும். மிட்டாய் சடப்பொருள்; அதனை நம் உடலின் கண் உள்ள நாக்குச்சுவைக்கிறது. அந்தச்சுவை உணர்வாகப் புத்திதத்துவம் திரிய அந்த உணர்வைத்தான் ஆன்மா சுழுந்தி அனுபவிக்கிறது.

புத்திதத்துவத்தின் நன்மையும் தீமையும் ஆகிய நினைவுகள் எட்டுப் பாவகங்களாகக் கூறப்படும். ''அறம், அறிவு, பற்றின்மை, செல்வம்'' ஆகிய நான்கும் நன்மையான பாவகங்களாகும். ''மறம், அறியாமை, பற்று, வறுமை'' என நான்கும் தீமையான பாவகங்களாகும். இப்பாவகங்கள் புத்திதத்துவத்தில் சுழற்சியாக ஒன்றன்பின் ஒன்றாக வரும். நாம் இவற்றில் அகப்பட்டு உழல்கின்றோம். 'அளவிலாப் பாவகத்தால் அமுக்குண்டு' என மணிவாசகர் கூறுவது நினைக்கத்தக்கது.

நாம் பார்த்த, கேட்ட பொருட்களையும், கருத்துக்களையும் நம் சித்தம் பதியவைத்துக் கொண்டு வாய்ப்பு நேரும் பொழுதெல்லாம் நினைவூட்டும். இதனால் சித்தம் இன்ப துன்ப அனுபவங்களை நினைத்து நினைத்துச் சிந்தனை செய்யும் கருவியாகிறது. பொதுவாகச் சித்தத்தை நினைவு கருவி என அறிதல் வேண்டும். ஆங்கிலத்தில் இதனை 'Faculty&memory' என்று கூறுவர்.

மேற்கண்ட கருவிகள் வெவ்வேறு செயல்களைச் செய்வதால் அவை ஒரே கருவியாக இருக்க முடியாதென்றும் செயற்பாட்டால் அவை தனித் தனியே உள்ள நான்கு கருவிகள் என்றும் சைவசித்தாந்தம் கூறுகிறது.

பிரகிருதி மாயை

மேலே கண்ட இருபத்து நான்கு ஆன்ம தத்துவங்களும் பிரகிருதி மாயையில் இருந்து தோன்றும். இவற்றை இறைவன் சீகண்டருத்திரர் வாயிலாகத் தோற்றுவிப்பார்.

அசுத்தமாயையின் காரியமாகிய கலையினின்றும் பிரகிருதிமாயை தோன்றும்.

இதனை ''மூலப்பகுதி'' என்றும், ''மூலப்பிரகிருதி'' என்றும், ''மான்'' என்றும் கூறுவதுண்டு. இதன் கண் சத்துவம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களும் தோன்றும்.

முக்குணங்களும் வெளிப்படாது அடங்கி நிற்கும் நிலையே மூலப் பிரகிருதி ஆகும். வெளிப்படாமல் அடங்கி நிற்கும் நிலைக்கு அவ்வியத்தம் என்று பெயர்.

முக்குணங்களும் வெளிப்பட்டுத் தம்முள் சமமாய் இருக்கும் நிலைக்குக் ''குணதத்துவம்'' என்று பெயர்.

முக்குணங்களுள் ஒன்றைவிட ஒன்று மிகும்பொழுது மேலே கண்ட இருபத்துநாலு தத்துவங்களும் தோன்றும்.

இருபத்துநாலு தத்துவங்களும் தோன்றுவதற்குத் தாயாக மூலப் பிரகிருதியும் குணத்துவமும் இருப்பதால் அவற்றைத் தத்துவக் கணக்கில் சேர்த்து எண்ணுவது இல்லை.

சில சாத்திரங்களில் மேலே சொன்ன இருபத்துநாலு ஆன்ம தத்துவங்களுள் சித்தத்தை மனத்துள் அடக்கி இருபத்து மூன்று எனக்கொண்டு குணத்தத்துவத்தை ஒரு தத்துவமாக எண்ணி இருபத்துநாலு எனச் சொல்லப்பட்டுள்ளது. சில சாத்திரங்கள் குண தத்துவத்தைப் பிரகிருதிமாயையில் அடக்கி அதனை ஒரு தத்துவமாகக் கொண்டு சித்தத்தை மனத்துள் அடக்கி இருபத்துநாலு என்று சொல்வதுண்டு. எனினும் மேலே கண்டவாறு பூதம் ஐந்து, தன்மாத்திரை ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து அந்தக்கரணம் நான்கு ஆக ஆன்ம தத்துவம் இருபத்து நான்கு எனச் சொல்வதுதான் பெரும்பான்மையான வழக்கமாகும்.

குணதத்துவத்தில், உள்ள சத்துவகுணம், இராசதகுணம், தாமதகுணம் ஆகிய மூன்றும் ஆன்மதத்துவம் இருபத்துநான்கிலும் கலந்து நிற்கும், உலகம் முக்குண மயம் எனச் சொல்கிறோம். உதாரணமாகக் காற்று மென்மையாக வீசும்போது சத்துவகுணத்தோடு அது கலந்து நிற்கிறது என்று கொள்ள வேண்டும். சண்டமாருதமாக வீசும் போது இராசதகுணத்தோடு அது கலந்து நிற்கிறது எனக் கொள்ள வேண்டும. காற்றே வீசாமல் புழுக்கமாக இருக்கும்போது தாமதகுணத்தோடு அது கலந்து நிற்கிறது என அறிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு தத்துவத்திலும் அவ்வப்போது காணப்படும் குணநிலையை வைத்து இன்னகுணம் மிகுந்திருக்கிறதென அறிந்து கொள்ளலாம்.

அசுத்தமாயா கருவிகள்

காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை, என

அசுத்தமாயா தத்துவங்கள் ஏழு ஆகும். இவற்றை வித்தியா தத்துவங்கள்என்றும் சொல்வதுண்டு. கடைசியாக வைக்கப்பட்டுள்ள மாயை காலம், நியதி முதலிய தத்துவங்களுக்குத் தாயாக விளங்குவதால் அதனைக் காரணமாக வைத்து ஏனையவற்றைக் காரியமாகக் கொண்டு சாத்திரங்கள் விளக்கம் செய்யும். அதனால்தான் அதனைக் காரியத்துள் சேர்க்காமல் கடைசியாகத் தனியே வைக்கப்பட்டுள்ளது.

காலம்

காலத்தை நாம் கண்ணால் காண முடியாது. ஆனால் அனுபவத்தால் உணரலாம். நேற்று, இன்று, நாளை எனக் காலத்தை மூவகையாக உணர்கிறோம். இவற்றை இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்றும் சொல்லுகிறோம்.

காலம் என ஒரு பொருள் இல்லையென்றும் தொழிற்பாட்டின் துவக்கம் நடு இறுதி ஆகியவற்றைக் காலமாகக் கணக்கிட்டுச் சொல்லுகிறோம் என்றும் சில சமயங்கள் சொல்கின்றன.

ஒருவர் ஒரு நூலை எழுதினால் அந்நூல் எப்பொழுது எழுதப்பட்டது? என்னும் வினா எழும். காலம் இல்லையேல் அதற்கு விடை சொல்ல இயலாது. ஒரு பொருள் நீண்டநாள் அழியாமல் இருந்தது என்றும் மற்றொரு பொருள் விரைவில் அழிந்தது என்றும் சொல்கிறோம். ''நீண்டநாள்'' என்பதும், ''குறுகியநாள்'' என்பதும், காலத்தின் அடிப்படையைக் கொண்டுதான் சொல்லப்படவேண்டும். இதனால் காலம் ஓர் உள்பொருளே ஆகும்.

சென்ற பிறவிகளில் நாம் எத்தனையோ வினைகளைச் செய்திருக்கிறோம். அவ்வினைகளின் பயன்களை நாம் இப்பிறவியில் எவ்வளவு காலம் அனுபவிக்க வேண்டும்? எப்பொழுது அனுபவிக்க வேண்டும்? என்பதைக் காலம்தான் நிர்ணயம் செய்கிறது. இதனால் காலதத்துவம் அவசியம் வேண்டப்படும்.

நியதி

காலம் வினைப்பயன்களை எப்பொழுது அனுபவிக்க வேண்டும்? என்பதையும், எவ்வளவு நாள் அனுபவிக்க வேண்டும்? என்பதையும் நிர்ணயம் செய்யும் என்று சொன்னோம். நியதி தத்துவம் அவரவர் செய்த வினையை அவரவரே அனுபவிக்கும்படி செய்வதோடு எவ்வாறு அனுபவிக்க வேண்டும்? என்பதையும் வரையறுக்கும். இன்னவினைக்கு இன்ன பயன் என்பதை நியதி தத்துவத்தைக் கொண்டுதான் இறைவனின் திருவருட்சத்தி நிர்ணயம் செய்கிறது. அப்படியானால் அந்தச் சத்தி மட்டும் போதாதா? என வினவலாம். திருவருட்சத்தி திரோதான சத்தியாக நின்று நாம் செய்த வினைக்குத் தக்க பயனைத்தான் தருமேயன்றி அதுவாக அதன விருப்பத்திற்கு எந்தப் பயனையும் பெத்தநிலையில் தராது. முக்திநிலையில்தான் அதன் கருணை தானே பெருகும்; இன்ன வினைக்கு இன்ன பயன் என்பதை நிர்ணயிப்பதுதான் நியதிதத்துவம். வினைப்பயனை நிர்ணயிப்பதற்கு நியதிதத்துவம் அவசியம் வேண்டப்படும்.

கலை

கலை, வித்தை, அராகம் ஆகிய மூன்று கருவிகள் பற்றி வேறு சமயங்கள் ஒன்றும் கூறவில்லை. சைவசித்தாந்தம்தான் இவை பற்றிக் கூறுகிறது. உயிர்கள் அநாதியில் ஆணவமல மறைப்பில் தம் அறிவு, இச்சை, செயல்கள் தொழிற்படாமல் கிடந்தன. படிமுறையே உயிர்கள் பயிற்சி பெற்றால்தான் ஆணவமல பந்தத்திலிருந்து நீங்கும். அவை பயிற்சி பெறுவதற்காகத்தான் இறைவன் பல தத்துவக் கருவிகளைப் படைத்தளித்திருக்கின்றான். முதல்முதல் ஆன்மா எவ்வித இயக்கமுமின்றி ஆணவமலத்துள் கிடக்கும்போது இறைவன் ''கலை'' என்னும் கருவியைப் படைத்து ஆன்மாவுக்கு அளிக்கின்றான். அக்கருவி ஆன்மாவின் கிரியாசக்தியைச் சிறிது எழுப்புகிறது. ஆணவமலத்துள் மறைப்புண்டு இயங்காமல் கிடந்த ஆன்மாவின் கிரியாசக்தி ''கலை'' என்னும் கருவியின் துணை கொண்டு மெல்ல இயங்கத் துவங்குகிறது.

கலை என்பதற்கு நீக்குதல், செலுத்துதல் என்னும் இருபொருள் உண்டு. ஆன்மாவின் கிரியாசக்தியை மறைந்திருந்த ஆணவமலத்தைச் சிறிது நீக்கி அதனைச் செலுத்துதல் ''கலை'' என்னும் கருவியின் தொழிலாகும்.

இன்று நடைமுறையில் கலை என்னும் தத்துவம் உண்டென்பதை எவ்வாறு தெரிந்து கொள்வது? என வினவலாம். சித்தாந்த சாத்திரங்களிலும் அவற்றின் உரைகளிலும் உள்ள சில குறிப்புக்களை வைத்தே நாம் இதனை உய்த்துணர வேண்டும்.

ஆன்மா தனித்து நின்றால் ஆணவமலம் அதனைப் பற்றி அறிவிழக்கச் செய்துவிடும். ஏதேனும் ஒரு கருவியைப் பிரிப்பின்றி அது பற்றி நின்றால்தான் அதன் அறிவு இயங்கும். நாம் அகங்கார தத்துவத்தைப் பற்றி, ''இன்னசெயலைச் செய்வோம்'' எனத் துணிந்து எழுகின்றோம் என வைத்துக் கொள்வோம். இந்த எழுச்சி தோன்றும்போது நாம் அகங்கார தத்துவத்தைப் பற்றியிருக்கின்றோம் என்ற உணர்வு நமக்கு இருக்கவே செய்கிறது. சில சமயங்களில் இந்த அகங்காரம் நமக்கு வேண்டாம் என்றுகூட எண்ணுகிறோம். அகங்கார தத்துவத்தைப் பற்றியிருக்கிறோம் என்ற உணர்வு நமக்கு ஏற்படுவதால் நாம் அதனை வேறாக நின்று பற்றியிருக்கிறோமேயன்றிப் பிரிப்பின்றி நின்று பற்றவில்லை என்பது புலனாகிறது. நாம் வேறாக நிற்கும்போது தனித்து நிற்க முடியாததலால் எதனையாவது ஒன்றைப் பற்றித்தான் நிற்கவேண்டும். அப்படிப் பற்றவில்லையென்றால் ஆணவமலம் நம்மை மறைத்துவிடும். அகங்கார தத்துவத்தில் நாம் நிற்கும்போது உண்டாகும் வேறுபாட்டுணர்வைச் சிந்தித்துப் பார்த்தால் நாம் வேறொன்றைப் பற்றிக் கொண்டுதான் அகங்கார தத்துவத்தைப் பற்றியிருக்கிறோம் என்பது இனிது விளங்கும். அப்படிப் பற்றி இருக்கும் கருவிதான் ''கலை'' என்னும் கருவியாகும். கலை என்னும் கருவியை நாம் பிரிப்பின்றிப் பற்றியிருக்கின்றோம். அதனின்றும் நாம் என்றும் வேறுபட்டு நிற்பதில்லை. அக்கருவி நம்முடன் ஒட்டியேதான் நிற்கும். அதனால்தான் அந்தக் கருவியில் நிற்கும்போது நமக்கு வேறுபாட்டு உணர்வு தெரிவதில்லை. ஆணவமலம் உண்டெனக் கொண்ட சைவசித்தாந்தத்துக்கு இவ்வாறு பற்றி நிற்கும் உட்கருவி உண்டெனக் கொள்ள வேண்டுவது அவசியம் என்பதைக் கூற வேண்டுவதில்லை. அகங்கார தத்துவத்திற்கு உட்கருவியாக இன்று நடைமுறையில் ''கலை'' என்னும்

தத்துவம் செயல்படுகிறது என அறிந்து கொள்ளவேண்டும். ஆணவமலத்துண்மை கொள்ளாத பிறசமயங்களுக்கு இவ்வாறு உட்கருவி உண்டெனச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

வித்தை

அநாதிகேவலத்தில் ஆணவமலத்தால் மறைப்புண்டு கிடந்த ஆன்மாவின் ஞானசக்தியை முதற்கண் எழுப்புவது ''வித்தை'' என்னும் தத்துவமாகும். இன்று நடைமுறையில் அது புத்திதத்துவத்திற்கு உட்கருவியாக விளங்குகிறது. புத்திதத்துவத்தில் நிற்கும் பொழுது நாம் வேறுபட்டு நிற்கின்றோம் என்னும் உணர்வு தோன்றுவதால் நாம் பிரிப்பின்றி நிற்கின்ற உட்கருவியாக வித்தியாதத்துவம் புத்திதத்துவத்திற்குள் விளங்குகிறது எனத் தெரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு தத்துவமும் அதற்கு இனமாக உள்ள மற்றொரு தத்துவத்துடன் இணைவது இயல்பு. அகங்கார தத்துவம் செயல்பாட்டை ஊக்குவிப்பதால் கிரியாசக்தியை எழுப்புகின்ற கலாதத்துவம் அதற்கு உட்கருவியாகிறது. அதேபோல ஞானசக்தியை எழுப்புகின்ற வித்தியாதத்துவம் புத்திதத்துவத்திற்கு உட்கருவி ஆகிறது.

அராகம்

''அராகம்'' என்றால் விருப்பமென்று பொருள். அநாதிகேவலத்தில் ஆணவமலத்தால் மறைப்புண்டு கிடந்த ஆன்மாவின் இச்சாசக்தியை அராகதத்துவம் எழுப்புகிறது. மனம் ஆசைப்படும் கருவியாதலால் அராகதத்துவம் மனத்திற்கு உட்கருவியாக நடைமுறையில் விளங்குகிறது. சித்தம் மனத்துள் அடங்கும்.

காலம், நியதி, கலை, வித்தை, அராகம் ஆகிய ஐந்து தத்துவங்களும் ஆன்மாவுக்கு உட்சட்டையாக அமையும். இச்சட்டையைக் ''கஞ்சுக சரீரம்'' என்று சொல்வது வழக்கம். அநாதிகேவலத்தில் எவ்வித உடலுமின்றிக் கிடந்த ஆன்மாவுக்கு முதலில் அசுத்தமாயையின் கலக்குண்ட பாகம் பொதுச் சரீரமாக அமைகிறது. இதனைக் காரண சரீரம் எனக் கூறுவர். அடுத்துக் ''கஞ்சுகசரீரம்'' சிறப்பு வகையாக அமைகிறது. மகாசங்கார காலம் அல்லது முக்திக்காலத்தில்தான் காரணசரீரமும் கஞ்சுகசரீரமும் நீங்கும். கஞ்சுசரீரத்தில் ஆன்மா எப்பொழுதும் பிரிப்பின்றி நிற்கும்.

மேலே நாம் விளக்கிய குணதத்துவமும் ஆன்மாவுக்கு ஒரு சரீரமாக விளங்கும். அதனைக் குணசரீரம் என்று கூறுவர். இஃதும் இறுதியில்தான் நீங்கும். ''காரணசரீரம்'', ''கஞ்சுகசரீரம்'', ''குணசரீரம்'' ஆகிய மூன்றையும் ''பரசரீரம்'' என்றோ ''அதிசூக்கும சரீரம்'' என்றோ சொல்வது வழக்கம்.

தன்மாத்திரைகள் ஐந்தும் மனம், புத்தி, அகங்காரம் ஆகிய மூன்றும் கூடிநிற்கின்ற சரீரம் சூக்குமசரீரம் ஆகும். இஃதும் மகா சங்கார காலம் அல்லது முக்திக் காலத்தில்தான் அழியும்.

ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் கூடி நிற்கின்ற சரீரம் தூலசரீரம் ஆகும். இச்சரீரம்தான் நமக்குத் தெளிவாகப் புலனாகின்றது.

இத்தூலசரீரம் காலம் தோறும் நீங்க மீண்டும் மீண்டும் புதியசரீரம் வந்து கூடும்.

ஆன்மாவுக்குக் காரணசரீரம், கஞ்சுகசரீரம், குணசரீரம், சூக்கும சரீரம், தூலசரீரம் என ஐந்து சரீரங்கள் உண்டு என்பதை இதுகாறும் கூறியவாற்றால் அறியலாம்.

புருடதத்துவம்

கஞ்சுகசரீரத்தோடு கூடிநிற்கின்ற ஆன்மா பிரகிருதிமாயா கருவிகளைப் பற்றிப் போகம் அனுபவிப்பதற்கு ஆயத்தமாக நிற்கும் நிலையே புருடதத்துவம் எனப்படும். புருடதத்துவம் உண்மையில் ஒரு தத்துவம் அன்று. எந்த உடலும் இன்றி இருந்த ஆன்மா கஞ்சுகசரீரத்தோடு கூடியதும் புருடன் எனப் பெயர் பெறுகிறது. உடலின்றிக்கிடந்த ஆன்மாவினின்றும் வேறுபடுத்திக் காட்டுதற்கே புருடன் என்னும் சொல்லைக் கையாள்கிறோம். புருடன் பிரகிருதி மாயா கருவிகளைப் பற்றுவதற்காக அவற்றை நோக்கி நிற்கும் நிலையை ஒரு தத்துவமாகக் கொண்டு புருடதத்துவம் எனச் சொல்லுகிறோம்.

மாயை

அசுத்தமாயை பரந்து விரிந்து கிடக்கும். 'இறைவன் ஆணையின் கீழ் உள்ள அனந்ததேவர் மாயையையின் ஒரு பகுதியைக் கலக்கி அதனின்றும் காலம், நியதி முதலிய தத்துவங்களைத் தோற்றுவிப்பார். அசுத்தமாயையின் கலக்குண்ட பாகமே ''மாயை'' எனப்படும். இது கலை, வித்தை போலக் காரியமாகாமல் அவற்றை நோக்கக் காரணமாக நிற்பதால் கடைசியில் வைத்து எண்ணப்பட்டது. இம்மாயை ஆன்மாவுக்குப் பொது வகையில் ''காரணசரீரமாக'' அமையும்.

சிவதத்துவம்

சிவம், சத்தி, சாதாக்கியம், மகேசுரம், சுத்தவித்தை எனச் சுத்தமாயா தத்துவங்கள் ஐந்தாகும் இவற்றைச் சிவதத்துவங்கள் என்றும் சொல்வதுண்டு. இவை உல்கத்தைத் தொழிற்படுத்தக் கருதும் இறைவனுக்கு அந்நிலையில். இடமாய் நிற்பனவேயன்றிச் சகலராகிய நமக்குச்சரீரமாக வந்து பொருந்துவதில்லை. சிவதத்துவங்கள் கீழ் உள்ள அசுத்தமாயா தத்துவங்களை இயக்கும், நாம் பேசும் சொற்கள் சுத்த மாயா தத்துவங்களிலிருந்து தோன்றும்: இவ்வகையில் சிவதத்துவங்கள் நமக்குப் பயன்படும்.

சிவம்

உலகத்தைச் செயற்படுத்தக் க்ருதும் இறைவன் தனது இச்சை ஞானம், கிரியை ஆகிய மூன்று சக்திகளையும் சுத்தமாயையையில்

முதலில் செலுத்துவான். இச்சாசக்தி எப்பொழுதும் ஒரு தன்மைய தாகவே இருக்கும். ஞானசக்தியும் கிரியாசக்தியும் தனித்தும் சமஅளவிலும் கூடுதல், குறைவாகவும் சுத்தமாயையினை நோக்கும். முதலில் இறைவன் உயிர்களுக்கு உலகையும் உடலையும் தருவதற்காகத் தன் அளவில் ஞானசக்தியையும், கிரியாசக்தியையும் நோக்குவான். அப்பொழுது பரநாதமும், பரவிந்தும் தோன்றும். அவை இறைவனுடையனவரதலால் சடமாகிய தத்துவங்களாக வைத்து எண்ணப்படமாட்டா. பின்னர் இறைவன் தன் ஞானசக்தியைக் சுத்தமாயையின் கண் பொதுமையில் செலுத்துவான். அவ்வாறு செலுத்தும்போது சுத்தமாயையின் ஒரு பகுதி அவனுக்கு இடமாக அமையும். அதனைச் ''சிவதத்துவம்'' என்று கூறுவர். இச்சிவதத்துவம் தத்துவங்களில் வைத்து எண்ணப்படும். இறைவன் சுத்தமாயையின் ஒரு பகுதியை நோக்கியதும் அதன்கண் ஒரு அசைவு தோன்றும். அந்த அசைவிலிருந்து நாதம் பிறக்கும். இதனால் சிவதத்துவத்தை நாததத்துவம்என்றும் சொல்வதுண்டு.

சத்தி

ஞானசக்தியால் சுத்தமாயையின் ஒரு பகுதியை நோக்கிய இறைவன் தன் கிரியாசக்தியால் அடுத்த பகுதியைக் காரியப் படுத்துவான் அவ்வாறு காரியப்படுத்தும்போது சுத்தமாயையில் ஒரு சுழற்சி தோன்றும். இறைவனின் கிரியாசக்தி செலுத்தப்படுகின்ற இடமாதல் பற்றி இத்தத்துவம் ''சத்திதத்துவம்'' எனப்படும். சுழற்சி தோன்றுவதால் இது விந்து தத்துவம் எனவும்படும்.

சாதாக்கியம்

ஞானசக்தியாலும், கிரியாசக்தியாலும் சுத்தமாயையைப் பொதுமையில் நோக்கிய இறைவன் இனிச் சிறப்புவகையாக ஞானசக்தி யும், கிரியாசக்தியும் சம அளவில் தொழிற்பட சுத்தமாயையின் மூன்றும் பகுதியை நோக்குவான். அவ்வாறு நோக்கும்பொழுது அது ''சதாசிவ தத்துவம்'' என்று கூறப்படும். சக்தியும், சிவமும் சம அளவில் கூடி நிற்பதால் ''சாதாக்கியம்'' என்றும் இதனைக் கூறுவர். இது கீழ் உள்ள தத்துவங்களைச் சிறப்பு வகையாகத் தொழிற்படுத்தும்.

ஈசுவரம்

இறைவன் ஞானசக்தியினும் பார்க்கக் கிரியாசக்தியை மிகுதியும் செலுத்தி நிற்கும் இடம் மகேசுரத்துவம் எனப்படும். இதில் ஞானசக்தி குறைந்தும், கிரியாசக்தி மிகுந்தும் இருக்கும். இஃதும் கீழ் உள்ள தத்துவங்களை இயக்கும், இதனை ஈசுவரதத்துவம் என்றும் சொல்லுவர்.

சுத்தவித்தை

இறைவனின் கிரியாசக்தி குறைந்தும் ஞானசக்தி மிகுந்தும்

தொழிற்படும் இடம் சுத்தவித்தை எனப்படும். இஃதும் உள்ள கீழ் உள்ள தத்துவங்களை இயக்கும்.

இறைவன் பரநாதம், பரவிந்து, சிவம், சக்தி ஆகிய நான்கிலும் அருவமாக நிற்பான், அப்பொழுது அவனுக்குச் சிவம் என்று பெயர். சதாசிவ தத்துவத்தில் அருவுருவாக நிற்பான். அப்பொழுது அவனுக்குச் ''சதாசிவம்'' என்று பெயர். மகேசுர தத்துவத்தில் உருவமாக நிற்பான், அப்பொழுது அவனுக்கு மகேசுரன் என்று பெயர். சுத்த வித்தையில் பிரமா, திருமால், உருத்திரன் ஆகிய மூன்று நிலையில் நிற்பான். அஃதும் உருவநிலையே ஆகும். இந்நிலையை வித்தியேசுவர நிலையெனச் சொல்வது வழக்கம். இந்த ஐந்து தத்துவங்களிலும் இவ்வாறு நின்று அசுத்தமாயையில் உள்ள தத்துவங்கள் தோன்றவும், இயங்கவும், அனந்தேசுவரருக்குத் துணையாகச் செயற்படுவான்.

சுத்தமாயா தத்துவங்கள் கீழ் உள்ள தத்துவங்களை இயக்குவதால் பிரேரகதத்துவங்கள் என்று சொல்லப்படும்.

சிவதத்துவம் கீழ் உள்ள மாயையை எழுப்பும்; சக்திதத்துவம் காலம், நியதி, கலையை எழுப்பும்; சாதாக்கியம் புருடனை எழுப்பும்; ஈசுவரம் அராகத்தை எழுப்பும்; சுத்தவித்தை வித்தையை எழுப்பும்; இவ்வாறு இந்த ஐந்து தத்துவங்களும் செயற்படும்.

சுத்தமாயைக்கு ஊர்த்துவ மாயை, மகாமாயை, குடிலை, விந்து எனப் பெயர்கள் உண்டு.

அசுத்தமாயைக்கு அதோமாயை, மாயை, மோகினி என்னும் பெயர்கள் உண்டு.

பிரகிருதிமாயைக்கு மான், அவ்வியத்தம் என்னும் பெயர்களுண்டு.

மேலே சொன்னவாறு முப்பத்தாறு தத்துவங்களும் ஆன்மாவிற்குக் கருவிகளாக நின்று பயன்படும். இதுவரை 36 தத்துவங்கள் பற்றி ஆராய்ந்தோம். இத்தத்துவங்கள் பொருள் உலகைச் சார்ந்தவை ஆகும். இனிச் சொல் உலகு பற்றி ஆராய்வோம்.

சொல் உலகு

நாம் பேசுகின்ற சொற்கள் சொல் உலகைச் சார்ந்தவை ஆகும். சொற்கள் பொருட்களைப் பற்றியே நிற்கும் ஆதலால் சொல் உலகைத் தத்துவங்களுள் வைத்து எண்ணாமல் தாத்துவிகங்களில் வைத்து எண்ணுவது வழக்கம்.

சொற்கள் இல்லாவிட்டால் நமக்கு அறிவு விளங்காது. ''குடம்'' என்று சொன்னதும் குடமாகிய பொருள் நம் நினைவுக்கு வருகிறது. சொற்கள் பல்வேறு மொழிகளுக்கு உரியனவாக விளங்குகின்றன. மொழிகள் வாயிலாகத்தான் நாம் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுகிறோம்.

சொல் என்பது நாம் காதால் கேட்கின்ற ஓசையைக் குறிக்காது. அவ்வோசையின் வழியே எழுந்து நமக்குப் பொருள் உணர்வை உண்டாக்குகின்ற ஆற்றலையே குறிக்கும். ''எழுத்து'' எனப்படுவதும் சொல் எனப்படுவதும் உண்மையில் இவ்வாற்றலே ஆகும். சொற்கள் சொல்லப்பட்டதும் அழியும். ஆனால் அவை பொருள் உணர்த்தும் ஆற்றலை எழுப்புவதால் அவ்வாற்றலே நமக்குப் பொருளை உணர்த்தும் என அறிதல் வேண்டும்.

பொருள் உணர்த்தாமல் வெறும் சப்தம் மாத்திரமாய் நாம் கேட்பது ''ஓசை'' எனப்படும். பொருள் உணர்வோடு நாம் கேட்பது ஒலி எனப்படும். பொருள் உணர்வை உண்டாக்குகின்ற சொற்கள் அனைத்தும் சுத்தமாயையில் இருந்தே தோன்றும்.

முதன்முதல் சிவதத்துவம் எனப்படும் நாததத்துவத்தில் சுத்தமாயையின் விருத்தியாய் சூக்குமை வாக்குத் தோன்றும். சூக்குமை வாக்கு சொல் வடிவில் இல்லாமல் சொற்கள் தோன்றக்கூடிய தகுதியுள்ள ஒலி அளவாக நிற்கும்.

அடுத்துச் சக்திதத்துவம் என்னும் விந்துதத்துவத்தில் சொல் பொதுவில் விளங்கியும் சிறப்பு வகையில் விளங்காதும் நிற்கும். இது ''பைசந்தி'' வாக்கு எனப்படும். ''பைசந்தி வாக்கு'' என்றால் ''விளங்குவது'' என்று பொருள். இது விளங்கியும் விளங்காமலும் நிற்பதால் மயில் முட்டையில் உள்ள நீர் போல நிற்கும் எனச் சொல்வதுண்டு. மயிலிடத்து உள்ள ஐவகை நிறங்களும் முட்டையில் உள்ள நீரில் விளங்கியும், விளங்காமலும் இருக்கும். சூக்குமை, பைசந்தி ஆகிய இருவகை வாக்கிலும் மொழிவேற்றுமை இல்லை. ஒலி அளவில் பொருள் உணர்த்துவனவாகவே அவை இருக்கும்.

சதாசிவ தத்துவத்தில் சொல் விளங்கித் தோன்ற உதானன் என்னும் காற்றுடன் கூடிக் கண்டத்தானத்தில் மெல்ல வெளிப்பட்டு நிற்கும், இது ''மத்திமை'' வாக்கு என்று சொல்லப்படும். இங்கே மொழி தோன்றும்.

மத்திமை வாக்கிற்கு அடுத்தபடியாக உதானன் என்னும் காற்றோடு விளங்கிய சொல் புறத்தே கேட்கும்படி பிராணவாயுவோடு கூடி வெளிப்படுதல் வைகரிவாக்கு எனப்படும். வைகரிவாக்கை சூக்கும வைகரி என்றும் தூலவைகரி என்றும் இருவகையாகச் சொல்வது வழக்கம். தன் செவிக்கு மட்டும் கேட்கின்ற அளவில் நிற்பது சூக்கும வைகரி ஆகும். இது ஈசுவரதத்துவத்தில் தோன்றும். தன் செவிக்கும், பிறர் செவிக்கும் கேட்கும்படியாகப் பல், நாக்கு முதலியவற்றின் மூலம். சொல் வெளிப்படுதல் தூலவைகரி ஆகும். இது சுத்தவித்தையில் தோன்றும்.

இருவகை வாக்குகளையும் வைகரிவாக்கு எனக் கொண்டு சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என நால்வகை வாக்குகளாகக் கொள்வது வழக்கம். மந்திரங்கள் அனைத்தும் இந்த நால்வகை வாக்குக்களை அடிப்படையாகக் கொண்டு சுத்தமாயையில் தோன்றும்.

இருவகை வாக்குகளையும் வைகரிவாக்கு எனக் கொண்டு சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என நால்வகை வாக்குகளாகக் கொள்வது வழக்கம். மந்திரங்கள் அனைத்தும் இந்த நால்வகை வாக்குகளை அடிப் படையாகக் கொண்டு சுத்தமாயையில் தோன்றும்.

நால்வகை வாக்குகளில் ஏதேனும் ஒன்றின் துணையின்றிப் பொருளை நாம் உணர முடியாது. மொழி உணர்வின்றிப் பொருளை நேரே உணரும் நிலை முத்தியில்தான் உண்டாகும். மந்திரங்கள் சொற்றொடர் களாகவும், சொற்களாகவும், எழுத்துக்களாகவும் தோன்றும்.

ஐந்து கலைகள்

சுத்தமாயை, அசுத்தமாயையை வியாபித்து நிற்கும். இந்த வியாபகம் ஐவகைப்படும். இந்த ஐவகைப் பகுதிகளையும் ஐந்து கலை

களாகச் சொல்வது வழக்கம். அவற்றை நிவிர்த்தி கலை, பிரதிட்டா கலை, வித்தியா கலை, சாந்தி கலை, சாந்தியதீத கலை எனக் கூறுவர். நிவிர்த்தி கலையில் பிரகிருதிமாயையில் உள்ள மண்தத்துவம் மட்டும் அடங்கும். பிரதிட்டா கலையில் பிரகிருதி மாயையில் உள்ள ஆன்ம தத்துவம் 24-ல் மண்தத்துவம் நீங்கலாக ஏனைய 23 தத்துவங்களும் அடங்கும். வித்தியா கலையில் அசுத்தமாயா தத்துவம் எனப்படும் வித்தியாதத்துவம் ஏழும் அடங்கும். சாந்தி கலையில் சுத்த தத்துவத்தில் உள்ள சுத்தவித்தை, ஈசுவரம், சதாசிவம் மூன்றும் அடங்கும் சாந்தியதீத கலையில் சிவம், சத்தி என்னும் இரண்டு தத்துவமும் அடங்கும். ஆக 36 தத்துவங்களும் சுத்தமாயையின் பகுதிகளாகிய இந்த ஐந்து கலைகளிலும் அடங்கும். நிவிர்த்தி கலையில் சுத்தமாயையின் வியாபகம் முனைக்காமல் மிகமென்மையாக இருக்குமாதலால் அதன்கண் மண்தத்துவம் மட்டும் அடங்குகிறது. பிரதிட்டா கலையில் சுத்தமாயை யின் வியாபகம் சிறிது கூடுதலாக முனைப்பதால் அதன்கண் ஏனைய 23 தத்துவங்களும் அடங்குகின்றன. வித்தியா கலையில் சுத்தமாயையின் வியாபகம் இன்னும் கூடுதலாக முனைக்குமாதலால் அதன்கண் வித்தியா தத்துவம் ஏழும் அடங்குகின்றன. சாந்தி கலையில் சுத்தமாயையின் வியாபகம் மிகமிக அதிகமாக முனைக்குமாதலால் அதன்கண் சுத்த தத்துவங்களில் இறுதி மூன்றும் அடங்குகின்றன. சாந்தியதீத கலையில் சுத்தமாயையின் முனைப்பு முழுமையாக விளங்குவதால் அதன்கண் சிவம் சத்தி இரண்டு தத்துவங்களும் அடங்குகின்றன. சுத்தமாயை வியாபகமாயும் அசுத்தமாயை வியாப்பியமாயும் இருப்பதாலேயே இவ்வாறு ஐந்து கலைகளாகச் சுத்தமாயை வகுத்துச் சாத்திரங்கள் சொல்கின்றன. இறைவனின் திருவருட்சத்தி ஐந்து கலைகளாக நின்று உயிரை முத்திக்கு இட்டுச் செல்லும் அந்தக் கலைகளுக்கும் இதே பெயர்கள் உண்டு. ஆனால் அவை சத்திகலைகளாகும். அச்சத்தி கலைகளுக்கு இடமாகச் சுத்தமாயையின் பகுதிகள் இருத்தல் பற்றி அதே பெயர்கள் இப்பகுதிகளுக்கும் இடப்பட்டன.

புவனங்கள்

புவனங்கள் என்றால் உலகங்கள் என்று பொருள். இவற்றுள் அண்டங்களும் அடங்கும். ஒவ்வொரு தத்துவத்திலும் புவனங்கள் உண்டு. பிருதிவிதத்துவம் எனப்படும் மண்தத்துவத்தில் 108 புவனங் கள் உண்டு என்றும் பிருதிவி தத்துவத்திற்கு மேல் பிரகிருதிமாயா தத்துவம் வரை உள்ள தத்துவங்களில் 56 புவனங்கள் உண்டு என்றும் வித்தியாதத்துவம் ஏழிலும் 27 புவனங்கள் உண்டு என்றும் சுத்த தத்துவத்தில் சுத்தவித்தை ஈசுவரம், சதாசிவம் ஆகிய மூன்றிலும் 18 புவனங்கள் உண்டு என்றும் சத்தி, நாதம் ஆகிய இரண்டு தத்துவத்திலும் 15 புவனங்கள் உண்டு என்றும் ஆக 224 புவனங்கள் மொத்தமாகப் பிரபஞ்சத்தில் உண்டு என்றும் சிவாகமங்கள் கூறுகின்றன. இப்புவனங் களில் பல்வேறு வகையான உயிர்வாக்கங்கள் வாழ்கின்றன. இவை நம் கண்ணுக்குத் தெரிய மாட்டா. நாம் வசிக்கின்ற பிருதிவி தத்துவ புவனத்தில் உள்ள இந்த உலகம் மட்டும் நமக்குப் புலனாகிறது. நாம் வசிக்கின்ற பிருதிவி தத்துவத்தில் 1000 கோடி அண்டங்கள் உண்டு என்றும் சாத்திரங்கள் சொல்கின்றன. இவற்றையெல்லாம் நூல் அளவையாகத்தான் நாம் அறிந்து கொள்ள முடியும்.

அத்துவாக்கள்

அத்துவாக்கள் என்றால் படி வழிகள் என்று பொருள். உயிர் முத்தியை நோக்கி முன்னேறுவதற்குரிய படிவழிகள் அத்துவாக்கள் எனக் கூறப்படும்.

மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என அத்துவாக்கள் ஆறாகும்.

மந்திரம் எழுத்துக்களால் ஆகிய சொல் ஆகும். பதம் மந்திரச் சொற்றொடராகும். வன்னம் என்பது எழுத்துக்களாகும். புவனம் என்பது உலகங்களாகும். தத்துவம் என்பது நாம் மேலே ஆராய்ந்த முப்பத்தாறு கருவிகளாகும். கலை என்பது மேலே சொல்லப்பட்ட ஐந்து கலைகளாகும்.

உலகம் சொல் உலகம், பொருள் உலகம் என இருவகைப்படும். சொல் உலகம் நால்வகை வாக்குகளாக மேலே விவரிக்கப்பட்டது. அவ்வாக்குக்களில் தோன்றுகின்ற மந்திரம் பதினொன்றாகும். அவை பஞ்சப்பிரம மந்திரம் என்றும் சடாங்க மந்திரம் என்றும் சொல்லப் படும்.

மந்திரங்கள் பதங்களால் ஆகியவை இப்படிப்பட்ட பதத் தொடர் கள். 18 என்று ஆகமத்தில் சொல்லப்பட்டுள்ளது. அவை ஓநமோ முதல் ஓங்காரம் வரை உள்ளவையாகும்.

எழுத்துக்கள் வடமொழியில் உள்ள 51. அக்கரங்களாகும்.
புவனம் மேலே விவரிக்கப்பட்டபடி 224. ஆகும்.
தத்துவம் மேலே விவரிக்கப்பட்டபடி 36. ஆகும்.
கலை மேலே விவரிக்கப்பட்டபடி 5. ஆகும்.

மந்திரம் பதத்துள் ஒடுங்கும்; பரம் எழுத்துள் ஒடுங்கும்.
எழுத்து புவனத்தில் ஒடுங்கும். புவனம் தத்துவத்தில் ஒடுங்கும். தத்துவம் கலையில் ஒடுங்கும். இதனை மந்திராத்துவா பதாந்துவாவிலும் பதாந்துவா வன்னாந்துவாவிலும் வன்னாந்துவா புவனாந்துவாவிலும் புவனாந்துவா தத்துவாத்துவாவிலும் தத்துவாத்துவா கலையிலும் ஒடுங்கும் எனக் கூறுவர்.
கலைகள் ஒன்றிலொன்று ஒடுங்கப் பிரபஞ்சம் முழுதும் ஒடுங்கும்.
இறைவன் குருநாதனாக வந்து ஐந்து கலைகளிலும் ஆறு அத்துவாக் களையும் அடக்கி அத்துவ சுத்தி செய்வித்து ஞானத்தைத் தருவான்.
இது முத்தியைத் தரும் நிர்வாண தீட்சை எனக் கூறப்படும்.
இறைவன் தீட்சை செய்விக்கும்போது ஆறு அத்துவாக்களும் பின் கண்டவாறு ஐந்து கலைகளிலும் அடங்கும்: —

நிவர்த்தி கலை:

இதன்கண் இருதயம், சத்தியோசாதம் என்றும் 2. மந்திரங்களும் 81. பதங்களில் இறுதியில் உள்ள 28.பதங்களும் எழுத்துக்களில் இறுதி எழுத்தும் புவனம் 108-ம் தத்துவத்தின் மண்தத்துவமும் அடங்கும்.

பிரதிட்டா கலை:

இதன்கண் சிரம், வாமதேவதும் என்னும் 2. மந்திரங்களும் முன்சொன்ன 28-க்கு மேல் உள்ள 21. பதங்களும் எழுத்துக்களில் முன்சொல்லியதற்கு மேல் உள்ள 26. எழுத்துக்களும் புவனம் 56-ம் பிருதிதத்துவத்திற்கு மேல் உள்ள 23. தத்துவங்களும் அடங்கும்.

வித்தியா கலை:

சிகை, அகோரம் என்னும் 2. மந்திரங்களும் மேற்சொல்லியவற் றிற்கு மேல் உள்ள 20. பதங்களும் மேற்சொல்லியவற்றிற்கு மேல் உள்ள 7. எழுத்துக்களும் புவனம் 27-ம் வித்தியா தத்துவத்தில் உள்ள 7. தத்துவங்களும் அடங்கும்.

சாந்தி கலை:

இதன்கண் தத்புருடம், கவசம் என்னும் 2. மந்திரங்களும் மேற் சொல்லியவற்றிற்கு மேல் உள்ள பதங்கள் 11-ம் எழுத்துக்கள் முன்சொல்லியவற்றிற்கு மேல் உள்ள 3-ம் புவனம் 18-ம் சுத்தவித்தை, ஈசுவரம் சாதாக்கியம் என்னும் 3. தத்துவங்களும் அடங்கும்.

சாந்தி அதீதகலை:

இதன்கண் ஈசானம் அத்திரம் மூலம் ஆகிய மூன்று மந்திரங்களும் ஓம் என்னும் பதம் ஒன்றும் உயிர் எழுத்து 16-ம் புவனம் 15-ம் சத்தி, சிவம் என்னும் 2. தத்துவங்களும் அடங்கும்.

ஐந்து கலைகளைப் பற்றி விவரிக்கும்போது சுத்தமாயையில் மிக முனைந்து நிற்கும் பகுதி, குறைவாக முனைக்கும் பகுதி என்னும் வேறு பாடுகள் உண்டெனக் கூறியிருக்கிறோம். மந்திரம், பதம், எழுத்து, புவனம், தத்துவம், கலை ஆகியவற்றிலும் தூல, சூக்கும வேறுபாடுண்டு. தூலமாக உள்ள அத்துவாக்களைத் தூல கலைகளில் அடக்கியும் சூக்கும மாக உள்ளவற்றை 2. சூக்கும கலைகளில் அடக்கியும் இறைவனாகிய குருநாதன் தீட்சை செய்விப்பான். இவ்வாறு செய்விப்பதன் பொருள். 36. தத்துவங்களால் ஆகிய உலக பந்தத்தை உயிர் விடுத்து இறைவனோடு ஒன்றுவதுதான்.

இருவினை ஒப்பு, மலபரிபாகம் சத்திநிபாதம் வந்துற்ற நிலையில் இறைவனாகிய குருநாதன் இத்தீட்சையைச் செய்விப்பதால் நம் அறிவைக் கொண்டு இவற்றின் உண்மையை அளக்க முடியாது. சிவாகமங்களில் சொல்லப்பட்டுள்ள அளவில் இவற்றை நாம் தெரிந்து கொள்ளலாம்.

ஐங் கோசங்கள்

தூலசரீரம், அன்னமய கோசம் என்றும், சூக்குமசரீரம் பிராணமய கோசம் என்றும், குணசரீரம் மனோமய கோசம் என்றும் கஞ்சுகசரீரம் விஞ்ஞானமய கோசம் என்றும், காரணசரீரம் ஆனந்தமய கோசம் என்றும் சொல்லப்படும். தூலசரீரம் உணவால் நிலைப்பதால் அன்னமய கோசம் என்றும் சூக்குமசரீரம் பிராணவாயுவின் இயக்கத்தால் செயல் படுவதால் பிராணமய கோசம் என்றும், குணசரீரம் சித்தமாய்ச் செயல் படுவதால் மனோமய கோசம் என்றும், கஞ்சுகசரீரம் ஆன்மாவுக்கு அறிவை உண்டாக்குவதால் விஞ்ஞானமய கோசம் என்றும், காரண சரீரம் சிறிது இன்பத்தை உண்டாக்குவதால் ஆனந்தமய கோசம் என்றும் கூறப்படும்.

தூலசரீரம் நம்மைவிட்டு நீங்கியதும், நாம் சூக்குமசரீரத்தோடு புண்ணியப்பயன்மிகுதியாக இருந்தால் சுவர்க்கத்திற்கும், பாவப்பயன் மிகுதியாக இருந்தால் நரகத்திற்கும் செல்வோம். சூக்குமசரீரத்தோடு சுவர்க்கம் செல்லும் ஆன்மாவுக்குப் பூதசார உடம்பு என்னும் தேவ உடம்பு கொடுக்கப்படும். நரகத்திற்குச் செல்லும் ஆன்மாவுக்குச் சூக்குமசரீரத்தோடு யாதனாசரீரம் என்னும் உடம்பு கொடுக்கப்படும். உலகில் உயிர் பேயாக உலாவும்போதும் யாதனா உடம்பு அதனுடன் இருக்கும். உயிர் தூலசரீரத்தை விட்டதும் உடனே சூக்குமசரீரத்தோடு ஒரு கர்ப்பத்தில் உள்ள தூலசரீரத்துள் புகுவதும் உண்டு.

பூதங்களின் குணம் செயல் வடிவம் நிறம்

மண்: — குணம் கடினமாதல், செயல் தாங்குதல், வடிவம் நாற்கோணம், நிறம் பொன்மை அடையாளம் வஜ்ராயுதம். எழுத்து லகரமெய் அதிதேவர் பிரமன்.

நீர்: — குணம் குளிர்ச்சி, செயல் பதம் செய்தல், வடிவம் பிறை, நிறம் வெண்மை, அடையாளம் தாமரை, எழுத்து வகரமெய், அதிதேவர் திருமால். .

நெருப்பு: — குணம் வெம்மை, செயல் சுட்டு ஒன்றுபடுத்துதல், வடிவம் முக்கோணம், நிறம் செம்மை, அடையாளம் சுவத்தி, எழுத்து ஏகரமெய், அதிதேவர் உருத்திரர்.

காற்று: — குணம் அசைதல், செயல் பொருட்களைத் திரட்டல், வடிவம் அறுகோணம், நிறம் கருமை, அடையாளம் ஆறுபுள்ளி, எழுத்து யகரமெய், அதிதேவர் மகேசுரன்.

ஆகாயம்: — குணம் ''வெளியாகுதல்'', செயல் இடங்கொடுத்தல், வடிவம் வட்டம், நிறம் புகைமை, அடையாளம் அமுதவிந்து, எழுதது அகர உயிர், அதிதேவர் சதாசிவன்.

தத்துவங்களின் தோற்றமுறை

சுத்தமாயா தத்துவங்கள் சிவம், சத்தி சதாசிவம் ஈசுவரம் சுத்த வித்தை என்னும் வரிசையில் தோன்றும். சுத்தமாயா தத்துவங்களில்

இறைவன் நேரே செயலாற்றுவான்.

அசுத்தமாயா தத்துவங்களை இறைவன்அனந்ததேவர் வாயிலாக வெளிப்படுத்துவான் அசுத்தமாயையை அனந்ததேவர் கலக்கி ஒரு பகுதியை மாயை, எனப் பிரித்து எடுப்பார்: அம்மாயையிலிருந்து காலதத்துவம் தோன்றும். பின்னர் அந்த மாயையிலிருந்தே நியதி தத்துவம் தோன்றும். அதன்பின் மாயையிலிருந்து கலை என்னும் தத்துவம் தோன்றும். கலையிலிருந்து வித்தை என்னும் தத்துவம் தோன்றும். வித்தையினின்றும் அராகம் என்னும் தத்துவம் தோன்றும். இத்தத்துவங்கள் சேர்ந்ததே புருடதத்துவமாகும். கலையினின்றும் பிரகிருதி மாயை தோன்றும். பிரகிருதி மாயையில் சத்துவ, ராசத, தாமத குணங்கள் வெளிப்படாமல் அடங்கி நிற்கும். அவை சமமாக வெளிப்படும் நிலை குண தத்துவம் ஆகும். பின்னர் சத்துவ குணம் மேற்பட அதன்கண் புத்திதத்துவம் தோன்றும். அதன்பின் ராசதகுணம் மேம்படப் புத்திதத்துவனின்றும் அகங்கார தத்துவம் தோன்றும்.

அகங்காரத்துவம் சாத்வீகக் கூறு, ராசதக் கூறு, தாமதக் கூறு என முக்குணங்களின் வழி மூன்று கூறாய் நிற்கும். சாத்வீகக் கூறு தைசத ஆங்காரம் என்றும் இராசதக் கூறு வைகரி ஆங்காரம் என்றும் தாமதக்கூறு பூதாரி ஆங்காரம் என்றும் பெயர் பெறும். பின்னர் தைசத ஆங்காரத்தினின்றும் மனம் என்னும் கருவி தோன்றும். அதன்பின் அந்த அகங்காரத்திலிருந்தே ஞானேந்திரியங்கள் ஐந்தும் முறையே செவி, தோல், கண், நாக்கு, மூக்கு, என ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றும் வைகரி அகங்காரத்தினின்றும் கால், கை, வாய், கருவாய், எருவாய் ஆகிய ஐந்தும் ஒன்றன்பின் ஒன்றாக முறையே தோன்றும். தாமத அகங்காரமாகிய பூதாதி அகங்காரத்தினின்றும் முறையே சத்தம், பரிசும், ரூபம், இரதம், கந்தம் எனும் 5 தன்மாத்திரைகளும் தோன்றும். சத்ததன்மாத்திரையினின்றும் ஆகாய பூதம் தோன்றும். பரிசதன்மாத்திரையில் இருந்து காற்று எனும் பூதம் தோன்றும். ஒளி தன்மாத்திரையில் இருந்து நெருப்பு எனும் பூதம் தோன்றும். இரத தன்மாத்திரையில் இருந்து நீர் என்னும் பூதம் தோன்றும் கந்தன்மாத்திரையிலிருந்து மண் எனும் பூதம் தோன்றும் பூதங்கள் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றாமல் மேற்சொன்னவாறு ஒவ்வொரு தன்மாத்திரையிலிருந்தும் ஒவ்வொரு பூதம் தோன்றும், இவ்வாறு 36 தத்துவங்களும் தோன்றும். ஒடுங்கும் பொழுது எந்தத்தத்துவம் எந்தத் தத்துவத்திலிருந்து தோன்றியதோ அந்த தத்துவத்தில் கீழிருந்து முறையே ஒடுங்கும்.

தாத்துவிகங்கள்

தத்துவங்களின் காரியம், தாத்துவிகங்கள் எனப்படும். ஆனால், தாத்துவிகம் அனைத்தும் உடலில் உள்ளவையாக இருக்குமே அல்லாமல் வெளி உலகில் உள்ளவையாக இருக்கமாட்டா. தாத்துவிகங்கள் 60 ஆகும். தத்துவம் 36ம் தாத்துவிகம் 60ம் சேர்ந்து மொத்தம் 96 ஆகும். பிறசமயங்கள் 36 தத்துவங்களைச் சொல்லாவிட்டாலும் தாத்துவிகங்களில் சிலவற்றைக் கூடுதலாகச் சொல்லி 96 எனக் கணக்கிடுகின்றன.

இந்தியாவில் தோன்றிய சமயங்கள் அனைத்தும் தத்துவ தாத்துவிகங்களில் மொத்தம் 96 என்பதில் பெரிதும் ஒத்துப்போகின்றன.

தாத்துவிகம் 60 வருமாறு

மண்ணின் கூறு:- எலும்பு, தசை, மயிர், தோல், நரம்பு என்னும் ஐந்து, நீரின் கூறு:- சிறுநீர், இரத்தம், சிலேத்துமம், வியர்வை, சுக்கிலம் அல்லது சோணிதம் என்னும் ஐந்து நெருப்பின் கூறு:- இருதயத்தில் வெப்பம், பசித்தீ, கண்ணில் வெப்பம், உடம்பில் வெப்பம், பைத்தியம் என்னும் ஐந்து, காற்றின் கூறு:- உதானன், பிராணன், அபானன், சமானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்னும் வாயுக்கள் பத்து. வானின் கூறு:- அத்தி, அலம்புடை, இடை, பிங்கலை, சுழுமுனை காந்தாரி, குகுதை, சங்குனி, சிகுவை, புருடன் என்னும் நாடிகள் பத்து, ஞானேந்திரியங்களின் விடயங்கள்:- சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐந்து, கன்மேந்திரியங்களின் விடயங்கள்:- வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் என்னும் ஐந்து. அகங்காரத்தின் கூறு:- தைசதம், வைகாரியம், பூதாதி என்னும் மூன்று, காமம், குரோதம், உலோபம், மோகம், மதம் எனக் குற்றம் ஐந்து (மாற்சரியம் குரோதத்துள் அடங்கும்) குணத்தின் கூறு:- சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் மூன்று. சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் வாக்கு நான்கு, இவை அனைத்தையும் கூட்டத் தாத்துவிகங்கள் அறுபது ஆம்.

அதிகவெப்பத்தால் மூளை கலங்கிப் பைத்தியம் உண்டாகிறது. அதனால் அது நெருப்பின் கூறாக வைக்கப்பட்டது காற்றின் கூறாகச் சொல்லப்பட்டுள்ள வாயுக்கள் நம் உடம்பின்கண் உள்ளவை. தனஞ்சயன் என்னும் வாயுதான் கடைசியாகப் பிரியும். வானின்கூறாகச் சொல்லப்பட்ட நாடிகளின் உள்ளே இடைவெளி இருப்பதால் அவை ஆகாயத்தின் கூறாகச் சொல்லப்பட்டது.

ஞானேந்திரியங்களின் விடயங்கள் சத்தம், பரிசம், ரூபம், இரதம், கந்தம் என மேலே சொல்லப்பட்டுள்ளது. தன்மாத்திரைகளையும் சத்தம், பரிசம், ருபம், இரதம், கந்தம் எனக் கூறுகிறோம். இவ்விரண்டும் ஒன்றல்ல. ஞானேந்திரியங்களின் விடயங்கள் கண், காது, மூக்கு இவைகளால் கவரப்படும் புலன்களாகும். இவற்றை விடய தன்மரத்திரை என்று சொல்வது வழக்கம். விடயதன்மாத்திரை தாத்துவிகத்தைச் சேர்ந்தது. ஐம்பூதங்களுக்கும் முதலாக உள்ள சத்தம், பரிசும், ரூபம் முதலிய தன்மாத்திரைகள் பூத தன்மாத்திரைகள் என்னும் சூக்கும் பூதங்கள் ஆகும். அவை தத்துவத்தைச் சார்ந்தவை. இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்துகொள்ள வேண்டும்.

காரிய மாயையின் பெயர்கள்

சுத்தமாயையின் காரியங்கள் வைந்தவம் என்றும், அசுத்தமாயையின் காரியங்கள் மாயேயம் என்றும் பிரகிருதமாயையின் காரியங்கள்

பிராகிருதம் என்றும் சொல்லப்படும். சுத்தமாயையின் காரியங்கள் ஐந்து சிவதத்துவங்களாகும். அசுத்தமாயையின் காரியங்கள் ஏழு வித்தியா தத்துங்கள் ஆகும். பிரகிருதமாயையின் காரியங்கள் 24 ஆன்ம தத்துவங்கள் ஆகும். சுத்தமாயையைச் சிவபெருமான் நேரே காரியப் படுத்துவார் அசுத்தமாயையை அனந்தேசுவரர் என்னும் விஞ்ஞான கலரைக் கொண்டு காரியப்படுத்துவார். பிரகிருதமாயையைப் பிரளயாகலருள் ஒருவராகிய சீகண்டருத்திரரைக் கொண்டு காரியப் படுத்துவார்.

உயிர்களின் இருப்பிடங்கள்

விஞ்ஞான கலருக்கு அசுத்தமாயைக்கும், சுத்தவித்தைக்கும் நடுவே உள்ள புவனங்கள் இருப்பிடங்களாகும். ஆண்டு சுத்தகாலம் முதல் சுத்தநிலம் ஈறாகிய சுத்ததத்துவங்கள் உண்டு. அவை விஞ்ஞான கலருக்குச் சரீரங்களாகும். பிரளயாகலருக்கு அசுத்தமாயையின் நடுவே உள்ள புவனங்கள் இருப்பிடமாகும் அவர்களுக்குக் காரண சரீரமும், கஞ்சுகி சரீரமும், உண்டு. சகலராகிய நமக்குக் காரண சரீரம், கஞ்சுக சரீரம், குணசரீரம், சூக்கும சரீரம், தூலசரீரம் என ஐந்து சரீரங்கள் உண்டு. நமக்குச் சிவ தத்துவங்கள் சரீரமாக வராமல் நமக்குள்ள தத்துவங்களை இயக்கும் தன்மையனதாக இருக்கும்.

அந்தக் கரண எழுத்துக்கள்

பொருள் உலகும் சொல் உலகும் இணைந்தே நிற்கும். அசுத்த மாயா கருவிகள் பிரகிருதி மாயா கருவிகளை எழுப்புமாயினும் சொல்லுணர்வு தோன்றாமல் பொருட்களை நாம் அறிய முடியாததலால் அக்கருவிகளோடு ஐந்து கலைகளில் நிற்கும் சூக்குமை, பைசந்தி முதலிய வாக்குகளுக்கு உரிய எழுத்துக்களாகிய நாதம், விந்து, மகரம், உகரம் அகரம் ஆகியவை அந்தக் கரணங்களை உடன் செலுத்தும். அவ்வாறு செலுத்தினால்தான் சொல்லுணர்வு தோன்றிப் பொருள் பற்றிய அறிவு நமக்கு உண்டாகும்.

தூல வைகரி நிவர்த்தி கலையைப் பற்றி அகர அக்கரவடிவாய் நிற்கும். சூக்கும வைகரி பிரிதிட்டாகலையைப் பற்றி உகர வடிவில் நிற்கும். மத்திமை வித்தியாகலையைப்பற்றி மகர வடிவில் நிற்கும். பைசந்தி சாந்தி கலையைப் பற்றி விந்து வடிவாய் நிற்கும். சூக்குமை சாந்தி அதீத கலையைப் பற்றி நாத வடிவாய் நிற்கும்.

அகரம் அகங்கார அந்தக் கரணத்தைச் செலுத்தும். உகரம் புத்தி தத்துவத்தைச் செலுத்தும் மகரம் மனமாகிய அந்தக் கரணத்தைச் செலுத்தும் விந்து சித்த தத்துவத்தைச் செலுத்தும் நாதம் புருடனைச் செலுத்தும்.

அகரம் அங்காத்தலாகிய முயற்சியால் வெளிவருவதால் அகங்கார தத்துவத்தைச் செலுத்தும் அட்சரமாயிற்று. உகரம் வாயை அசைத்தலால் உண்டாவதால் உகரமாகி நிச்சயிக்கும் புத்தி தத்துவத்தைச் செலுத்துவதற்கு உரியதாயிற்று மகரம் மௌனமாய் மனத்தில் தோன்றுவதால் மனத்தைச் செலுத்துவதற்கு உரியதாயிற்று.

அட்சரங்கள் நிர்விகற்பமாக இருக்கும் நிலையில் விந்து தத்துவம் சித்தத்தைச் செலுத்துவதற்கு உரியதாயிற்று. ஒலி மாத்திரமாய் நிற்கும் நாதம் புருடதத்துவத்தைச் செலுத்துவதற்கு உரியதாயிற்று. இந்த அட்சரங்களும் சடமாதலால் இவற்றை இவற்றிற்குரிய அதிதேவர்கள் செலுத்துவார்கள். அகரத்திற்குப் பிரமனும் உகரத்திற்குத் திருமாலும், மகரத்திற்கு உருத்திரனும், விந்துவிற்கு மகேசனும், நாதத்திற்குச் சதாசிவனும் அதிதேவர்கள் ஆவர்.

ஐந்தவத்தைக்குரிய கருவிகள்

உயிர் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என ஐந்தவத்தைப்படும். தத்துவ தாத்துவிகங்கள் மொத்தம் 96. இவற்றுள் புருடன் நீங்கிய வித்தியாதத்துவம் 6-ம், சிவதத்துவம் 5ம், அவத்தைக்கு ஏதுவாக மாட்டா. மீதம் 85 தத்துவ, தாத்துவிகங்கள் அவத்தைக்கு ஏதுவாகும். தூங்கப்போகும் நிலையில் உள்ள சாக்கிரத்தில் 35 கருவிகள் தொழிற்படும், 50 கருவிகள் தொழிற்படமாட்டா. தொழிற்படும் கருவிகள்:- ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, விடய தன்மாத்திரை ஐந்து, அந்தக்கரணம் நான்கு, புருடன் ஒன்று ஆக 35 ஆகும். சொப்பனத்தில் மேற்கண்ட கருவிகளில் ஞானேந்திரியம், கன்மேந்திரியம் 10-ம் நீங்க 25 கருவிகள் தொழிற்படும். சுழுத்தியில் பிராணன், சித்தம், புருடன் மூன்று மட்டும் தொழிற்படும். துரியத்தில் பிராணன், புருடன் மட்டும் தொழிற்படும். துரியாதீதத்தில் புருடன் மட்டும் தொழிற்படும். சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்து அவத்தைகளையும் முறையே விழிப்பு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் என்று கூறுவர்.

இதுகாறும் கூறியவாற்றால் தத்துவ தாத்துவிகங்களின் செயற்பாடுகள் அனைத்தும் புலனாகியிருக்கும். இவ்வாறு இவற்றின் விளக்கத்தை யாவரும் அறிந்துகொள்ளவேண்டும்.

''மெய்கண்டதேவன் திருவடி வாழ்க''